# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**OS.No. 6/2016**

P.W.1 தன்ராஜ் த/பெ. முத்துராமன் நாள் - 05.08.2022

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1** ம் பிரதிவாதி **தரப்பில் குறுக்கு விசாரணை**

அறந்தாங்கியில் உள்ள அடமானம் கொடுத்ததாக சொல்லப்படும் சொத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் சாட்சி தெரியவில்லை என்று பதில் அளிக்கிறார். மேற்படி சொத்து மதிப்பு 2 அல்லது 3 கோடி இருக்கும் என்றால் சரிதான், நான் லாரி வைத்து பிஸ்னஸ் செய்தேன். தற்போது கல்யாண மண்டபம் சொந்தமாக நடத்தி வருகிறேன். லாரி பிஸ்னஸ் 20 வருடமாக நடத்தி வந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 அடமான வட்டி கடன் பத்திரம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரம் சம்மந்தமாக 23.06.2015 இல் நான் விஜயராணிக்கு வழக்குரை அறிவிப்பு கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.1 இல் கண்டுள்ள சாட்சி பொற்சரவணன் என்னுடைய இனத்தை சார்ந்தவர் என்பதால் அவரை எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 இல் கண்டுள்ள சாட்சி ஜெயபால் 1 ம் பிரதிவாதி விஜயராணியின் உறவினர் ஆவார். இதுவரை சாட்சி பொற்சரவணன் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றால் சாட்சி நீதிமன்ற சம்மன் அனுப்புவதற்கு நான் நடவடிக்கை எடுத்தும் அதை பெற்றுக் கொண்டும் அவர் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்று பதில் அளிக்கிறார். பொற்சரவணனின் வயது 35 முதல் 40 வயது இருக்கலாம், அவர் என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு ஞாபகம் வரவில்லை. முதல் பிரதிவாதி விஜயராணிக்கு சகோதரர் இருக்கிறார் அது பற்றி தெரியுமா என்றால் சாட்சி அது பற்றி தெரியவில்லை என்று பதில் அளிக்கிறார். வா.சா.ஆ.1 ஏற்பட்டதாக சொல்லப்படும் காலத்தில் நான் லாரி பிஸ்னஸ் செய்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். பொதுவாக ரூ.5,00,000/- கடன் வாங்கும் போது இரண்டு மூன்று ஆவணங்கள் எழுதி வாங்கப்படுவது உண்டு என்றால் சாட்சி அது பற்றி எனக்கு தெரியவில்லை என்று பதில் அளிக்கிறார். வா.சா.ஆ.1 சாட்சி ஜெயபால் ரியல் எஸ்டேட் பிஸ்னசும் மற்றும் ரியல் எஸ்டேட் பிஸ்னஸ் புரோக்கர் தொழிலும் செய்கிறார் என்று பதில் அளிக்கிறார். விஜயராணி ரூ.5,00,000/- தொகையை திருப்பி கொடுப்பதற்கு வசதி வாய்ப்பு உடையவரா என்று பார்த்து கடன் கொடுக்கப்பட்டதா என்றால் சாட்சி விஜயராணியின் கணவர் விபத்தில் இறந்து விட்டதால் அவருக்கு வரவேண்டிய இழப்பீட்டு தொகையிலிருந்து விஜயராணி கடனை திருப்பி கொடுத்துவிடுவார் என்று தெரிந்து தான் விஜயராணிக்கு கடன் கொடுக்கப்பட்டது என்று பதில் அளிக்கிறார். விஜயராணி குடும்பத்தில் ஆண் உறுப்பினர்கள் இருக்கும் விபரம் எனக்கு தெரியுமா என்றால் சாட்சி விஜயராணிக்கு 2 பெண் குழந்தைகள் இருக்கிறார்கள் என்றும் விஜயராணி குடும்பத்தில் ஆண் உறுப்பினர் இருக்கிறார்களா என்று எனக்கு தெரியாது என்று பதில் அளிக்கிறார். வா.சா.ஆ.1 சாட்சி ஜெயபாலுக்கு விஜயராணியைத் தெரியும் மற்றொரு சாட்சி பொற்சரவணனுக்கு விஜயராணியை தெரிந்து இருக்கலாம் என்று பதில் அளிக்கிறார். விஜயராணியின் இரண்டு பெண் குழந்தைகளும் அரசு பள்ளியில் தான் படித்தார்கள் என்றாலும் அவர்களுக்கு கல்வி செலவு எதுவும் இல்லை என்றாலும் சாட்சி அது பற்றி எனக்கு தெரியாது என்று பதில் அளிக்கிறார். சொத்தில் வில்லங்கம் இருக்கிறதா

என்று சரிபார்த்த பிறகு தான் விஜயராணிக்கு தொகை கொடுக்கப்பட்டதா என்றால் சாட்சி வில்லங்கம் பார்க்கப்பட்டிருக்கலாம் என்று பதில் அளிக்கிறார். 4ம் பிரதிவாதி பிரகதாம்பாளிடம் வா.சா.ஆ.1 இல் கையொப்பம் வாங்கப்பட்டுள்ளதா என்றால் சாட்சி பிரகதாம்பாள் நடராஜனுக்கு இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துவிட்டதாகவும், நடராஜன் மனைவி விஜயராணி என்பதால் வா.சா.ஆ.1.இல் பிரகதாம்பாள் கையொப்பம் வாங்கப்படவில்லை என்று சாட்சி பதில் அளிக்கிறார். சாட்சி பொற்சரவணன் பிரதிவாதிகள் குடும்பத்தாருக்கு மிகவும் நெருங்கி நண்பர் என்றாலும் மற்றொரு சாட்சி ஜெயபால் பிரதிவாதிகள் குடும்பத்திற்கு உறவினர் என்றாலும் சாட்சி இருக்கலாம் என்று பதில் அளிக்கிறார். மேற்படி சாட்சி இருவருக்கும் வா.சா.ஆ.1 சொத்தின் மதிப்பு இரண்டு முதல் மூன்று கோடி இருக்கும் என்று தெரியும் என்றால் சாட்சி அது பற்றி எனக்கு தெரியாது என்று பதில் அளிக்கிறார். எனக்கும் சாட்சிகளுக்கும் வா.சா.ஆ 1 சொத்தின் மதிப்பு இரண்டு முதல் மூன்று கோடி மதிப்பு இருக்கும் என்ற விபரம் தெரியும் என்றாலும் நான் கல்யாண மண்டபம் வைத்து நடத்தி வருவதால் அந்த இடம் எனக்கு தேவைப்படும் என்பதாலும் சாட்சிகள் ரியல் எஸ்டேட் பிஸ்னஸ் மற்றும் ரியல் எஸ்டேட் புரோக்கர் பிஸ்னஸ் செய்து வருவதாலும் ஆண் துணை இல்லாத பிரதிவாதிகள் குடும்பத்தினரிடம் இருந்து அந்த சொத்தை அபகரிக்க பார்க்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. முதல் பிரதிவாதி பிரதி வாதிகள் குடும்பத்தின் நிர்வாகி/கர்த்தா இல்லை என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி விஜயராணிக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றாலும் விஜய ராணி கையொப்பம் போட்டு கொடுத்தது மற்ற பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் போலியாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழக்கு மூலம் தவறானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*